# உரையாசிரியர்கள்

தமிழ்ச் செல்வங்கள் பல காலம் பல கடந்தமையால் அப் பனுவல்கள் பலவற்றின் பொருளறியா, மரபுணரா நிலை நேர்ந்துள்ளது. ஆதலின் சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்றனவற்றின் ஆழ்கருத்துக்கள் அறியாது இடர்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வின்னல் போக்கி பண்டைப் பனுவல்களின் பாங்கறியச் செய்த பெருந்தொண்டு உரையாசிரியர்களையே சாரும். இவர்களின்றேல் அக்கலைச் செல்வங்கள் கருத்தறியப் பெறு. இருண்ட நிலையிலேயே இருந்திருக்கும். அவற்றிற்கு விளக்கம் தந்த ஒளிவிளக்கங்கள் உரையாசிரியர்கள் எனலாம். பண்டைச் செல்வங்களின் பெற்றியறியச் செய்த பெருமையும் இவர்களுடையதே.

பழம் நூல்களின் மூலம் அழியாது மறையாது குறையாது காத்த திறம் இவர்கட்கு உரியது. மூலப்பகுதி கிடைக்கப்பெறு நூல்கட்கு, இவர்கள் உரையினின்றே மூலம் அமைக்க முடிந்தது. உரையியற்றினமையால் தமிழ் உரை நடைக்கு வித்திட்டனர். இவர்கள் உரையினின்றே எண்ணரிய தமிழ் நூல்களின் பெயர்களும், பகுதிகளும் நமக்குக் கிடைத்துள்ளன. பண்டை இசை, நாடகப் பெருமை நுட்பம் இவர்கள் உரைகளாலேயே உணரமுடிகிறது. இத்தகு பெரும் பணியாற்றிய உரையாசிரியர்களால், மணிப்பிரவாள நடை, நடுநிலை தவறிய உரை, ஆசிரியர் கருத்தறியாது தம் காலக் கருத்தை ஏற்றிக் கூறும் அறியாமை, வடமொழி வரையறையிலாக் கலப்பு போன்ற இன்னல்களையும் நாமடைகின்றோம். இவ்வுரையாசிரியர்கள் காலம் 13ஆம் நூற்றாண்டு தொடங்கி 18வது நூற்றாண்டு வரை எனக் கொள்ளலாம்.

www.thamizham.net - Free E book No 3371

# இலக்கண உரையாசிரியர்கள்

## 1. நக்கீரர்

இறையனார் களவியலுக்கு உரையாத்தவர்; இதுவே இன்று கிடைக்கும் பழைய உரை. கடைச் சங்க காலத்தவர் அல்லர். 8ஆம் நூற்றாண்டைய பாண்டிக் கோவை பாடல்கள் மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளமையான், அதன் பின் வாழ்ந்தவராதல் வேண்டும். கவிதை மாண்புமிகு பீடு நடையது இவருரை. இவ்வுரையில்தான் முச்சங்கம் பற்றிய முழுவிவரம் முதன்முதல் தென்படுகிறது.

## 2. இளம் பூரணர்

உரையாசிரியர்களில் தலைமை சான்றவர். தொல்காப்பியம் முழுமைக்கும் முதலுரை வகுத்தவர். நன்னூலை மேற்கோள் காட்டுதலால் 13ஆம் நூற்றாண்டினர். சமணத் துறவி இவரது தொன்மையும், உரைத்தன்மையும் கருதி 'உரையாசிரியர்' என்றே அழைக்கப்பெறும் பெருமையர்.

எழுத்ததிகார உரை ஏற்றம் சான்றது. நேரிய பொருளை எளிய முறையில் தெளிவுபட வகுத்தும் தொகுத்தும் வட மொழிக் கலப்பின்றி இரத்தினச் சுருக்கமாக இவருரை அமைகிறது. வேண்டிய விவரங்களும், தேவையான மேற்கோள்களுமே கொண்டது. தமிழ் மரபினைத் தழுவிச் செல்வது; 40 நூல்களினின்றும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இவரை வழிகாட்டியாக வைத்தே பின்னைய உரையாசிரியர்கள் உரை எழுதலாயினர்.

## 3. பேராசிரியர்

தொல்-பொருளதிகாரம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு இயல்கட்கே

www.thamizham.net - Free E book No 3371

உரை கிடைத்துள்ளது. குறுந்தொகை 380 பாடல்கட்கும், திருக்கோவையாருக்கும் உரை எழுதியவர். இயற்பெயர் தெரியவில்லை. மதுரை ஆசிரியர் எனவும் படுவார். ஆசிரியர் யாவரினும் சிறந்து விளங்கியதால் பேராசிரியர் எனப் பட்டார் போலும் தக்க மேற்கோளும், தகுந்த நுட்ப விளக்கமும், வரலாற்றுக் குறிப்பும் கொண்டது இவர் உரை. தடை விடை கூறித் தகுந்த ரீதியில் அமைவது. தண்டியலங்காரத்தை மேற்கோள் காட்டுவதால் 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினர். சைவர்.

## 4. சேனாவரையர்

திருநெல்வேலி மாவட்ட ஆற்றூரினர். படைத்தலைவர் போலும்! வடமொழியிலும் புலமை மிக்கவர். சொல்லதிகாரத்திற்குத் திட்ப நுட்பம் செறிந்து சிறந்த உரை செய்துள்ளார். 'சொல்லுக்குச் சேனாவரையம்' எனச் சொல்லப் படுகிறது. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினர். இலக்கண இலக்கிய பயிற்சி மிக்கவர். முன்னைய உரைகளை நயமாகத் திறம்பட மறுக்கிறார். ஆனால் சிற்சில போது தமிழின் தன்மைக்கு ஏலாத, வடமொழி இலக்கண நெறிகளை நற்றமிழுக்கும் பொருத்திக் காட்டுகின்றனர். சிவஞான முனிவர், 'வடநூற் கடலை நிலை கண்டறிந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற்கும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்துரைப்பர்' என எழுதிப் புகழ்வது காண்க.

## 5. நச்சினார்க்கினியர்

மதுரையில் பார்த்துவாச கோத்திர அந்தணர் மரபில் தோன்றியவர். சைவர், சிந்தாமணிக்கு உரை எழுதிச் சமணரானவர். பல நூல்கட்கு உரை எழுதியவர். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி, குறுந்தொகை இறுதி 20 பாடல்கள் ஆகியவற்றிற்கு உரை கண்டவர். காலம் : 14ஆம் நூற்றாண்டு. விரிவும் விளக்கமும் உடையது இவருரை. இன்றியமையாதபோது சொற்

www.thamizham.net - Free E book No 3371

பொருளும், 'இலக்கணக் குறிப்பும் கொண்டுள்ளது, தெளிவான விளக்கம், உயர்ந்த நடை, சேனவரையர் போன்றுரைக் கண்டித்து உரை எழுதிச் செல்கின்றார். 'உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்' எனும் சிறப்புக் குரியவர். பாடலை நீட்டி, மடக்கி, ஒடித்து, கொண்டு கூட்டிப் பொருள் கூறுவது இவர் போக்காகும். பாட பேதங்களையும் குறித்துள்ளார். ஐரோப்பிய உரை விளக்கம் போன்று அமைத்துள்ளதாம்' இவருரை[1].

## 6. கல்லாடர், தெய்வச்சிலையார் போன்றோர்:

இவர்கள் தொல்காப்பிய உரையாசிரியர்கள்: புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு போன்றனவற்றுக்கு உரைகள் உள; ஆசிரியர்கள் அறியுமாறில்லை. சிலப்பதிகாரத்திற்கு அரும் பதவுரை யுளது; இயற்றியவர் பெயர் தெரியவில்லை; ஊர் நிரம்பையூர், வாழ்ந்தவிடம் திருவாரூரையடுத்த தீபங்குடி. 'நிரம்பையர் காவலர்' என்ற பெயருமுண்டு.

## 7. அடியார்க்கு நல்லார்:

சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர். கானல் வரி நீங்கலாக முதல் 19 காதைகட்கே உரை கிடைத்துள்ளது. சில இடங்களில் பதவுரையும், சிலவிடத்து பொழிப்புரையும், இன்றியமையா இடங்களில் இலக்கணக் குறிப்பும், ஏற்ற இடங்களில் முத்தமிழ்ப் பகுதிகளும் கொண்டு எதுகை மோனையுடன் அமைவது இவருரை. விசேடவுரையோடு விரி

---

[1]Nachinarkkiniar's comments are very much on the plan of European annotations. He paraphrases the text and grammatical peculiarities; he quote's Tholkappia Sutrams throughout, explains obsolete terms and gives the various readings which existed in his days; but his style is condensed and his language pedantic. His productions, however, show great powers of analysis —Rev. Dr. Bower.



www.thamizham.net - Free E book No 3371

வாக அமைவது. மேற்கோள் இன்ன நூலினின்றும் எடுத்தாளப்படுவது என்று குறிப்பது இவரது உரை இயல்பாகும். சோதிடக குறிப்புகள் தெரிகின்றன. 60-க்கும் மேலான நூல்களை மேற்கோள் காட்டுகின்றார். மறைந்து போன இசை, நாடகத்தமிழ் நூல்களை அறியலாம், மொத்தத்தில் செந்தமிழ் நலம் சான்ற தெனலாம். கலிங்கத்துப் பரணி மேற்கோள் காட்டியமையால் இவரது காலம் 13 ஆம் நூற்றாண்டாகும். இவரைப் போற்றிப் புரந்தவன் பொப்பண்ண காங்கேயன் எனும் கன்னட அரசன்.

## 8. பரிமேலழகர்:

திருக்குறளுக்கு உரை வகுத்தவர்: பரிபாடலுக்கும் திருமுறுகாற்றுப் படைக்கும் உரை கண்டதாகத் தெரிகிறது. பதின்மர் உரையில் இவர் உரையே ஏற்றம் சான்றதாக எண்ணப்படுகிறது; 'நூலிற், பரித்த வுரை யெல்லாம் பரிமேலழகன் தெரித்தவுரையாமோ? என்ற தொண்டை மண்டல சதகச் செய்யுள் கொண்டு தெளியலாம். இவரது உரை சொற்செட்டும், தருக்க முறையிலும் அமைகிறது. திட்ப நுட்பம் செறிந்தது, மேற்கோள் செய்யுட்களை உரை நடையிலேயே தந்துவிடுகின்றார். சொற்களுக்கு ஏற்ற பொருளுரைத்து வரம்பு கட்டி இலக்கணம் வகுப்பதில் வல்லவர். ஏற்ற இடங்களில் இலக்கணக் குறிப்பும் இயம்புவர்; வடமொழிக் கருத்தை ஒட்டி சிற்சில போது தமிழ் மரபுக்கு மாறாக உரை வகுக்கும் குற்றத்திற் காளாகிறார். ஆயினும் மொழித் திறமும், ஆயும் திறனும், ஆன்ற பேரறிவும் சான்றவர். இவர் காஞ்சி உலகளந்த பெருமாள் கோவில் அர்ச்சக மரபினர்; வைணவர். 13ஆம் நூற்றாண்டவர்.

## 9. பிறர்:

தொல்காப்பியப் பாயிரத்திற்கும், முதற் சூத்திரத்திற்கும் சிவஞான முனிவர் விளக்கமான உரை வரைந்துள்ளார். சிவஞான போதத்திற்கு 'மாபாடியம்' எனும் பேருரையும் செய்துள்ளார் நன்னூலுக்கு முதல் உரை கண்டவர் மயிலைநாதர்.

www.thamizham.net - Free E book No 3371

விருத்தியுரை தந்தவர் சங்கர நமச்சிவாயர்; காண்டிகையுரை செய்தவர் ஆறுமுக நாவலர். குறளுக்கு உரை கண்டவர்களில் மணக்குடவர், காளிங்கர், பரிப்பெருமாள் போன்றோர் உரைகள் சில உள. வீர சோழியத்திற்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார்; யாப்பருங்கலம், காரிகை இரண்டுக்கும் குணசாகரர் உரை இயற்றியுள்ளார்.

# பிரபந்த உரையாசிரியர்கள்

14, 15 ஆவது நூற்றாண்டுகளில் நாலாயிர திவ்விய-பிரபந்தத்திற்த வைணவ ஆசிரியர்கள் மணிபிரவாள நடையில் மணியும் பவழமும் கலந்தாற் போல உரைகள் இயற்றுவராயினர். இவ்வுரைகளை 'வியாக்கியானங்கள்' என்பர்.

## 1. ஆளவந்தார்:

11 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வீரநாராயணபுரத்தில் பிறந்தவர். திருவாய்மொழிக்கு முதன் முதல் உரை எழுதியவர்.

## 2. திருக்குருகைப் பெருமாள் பிள்ளான்

திருவாய்மொழிக்கு முதற் பேருரையாக '6000 படி'யினை இயற்றினார். 13 ஆம் நூற்றாண்டினர். ஆறாயிரப் படி என்பது ஆறாயிரம் கிரந்தங்களையுடையது. ஒரு கிரந்தமாவது ஒற்றெழுத்துக்களை நீக்கி 32 எழுத்துக்களால் ஆயது; படி அளவைக் குறிப்பது.

## 3. நஞ்சீயர்

திரு நாராயணபுரத்தில் தோன்றியவர்; 16 ஆம் நூற்றாண்டவர். 'சீரங்க நாதர்' எனவும் பெறுவர். திருவாய்மொழிக்கு '9000 படி' உரை தந்தவர். பெரிய திருவாய்மொழிக்கு வியாக்கியானம்' கண்ணிநுண் சிறுதாம்பு உரை, திருப்பள்ளி எழுச்சி உரை ஆகியவையும் எழுதியுள்ளார்.

www.thamizham.net - Free E book No 3371

### 4. நம் பிள்ளை

ஊர்: நம்மூர். வரதராசர் எனும் பெயருமுண்டு. 14 ஆம் நூற்றுண்டினர். திருவாய்மொழிக்கு 9000படி'யும், திருப்பள்ளியெழுச்சி, திருவிருத்தம், பெரிய திருமொழி ஆகியவற்றிற்கு வியாக்கியானமும் வரைந்துள்ளார்.

### 5. அழகிய மணவாள சீயர்:

காலம் 15 ஆம் நூற்றுண்டு. திருவாய்மொழிக்கு 12000 படி படைத்தவர். திருவாய்மொழி வியாக்கியானமும் வடித்தவர்.

### 6. பெரிய வாச்சான் பிள்ளை:

காலம் 15 ஆம் நூற்றுண்டு. நம்பிள்ளையின் மாணவர் நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் திருவாய்மொழி தவிர்த்த மூவாயிரம் பாடல்கட்கும் '24000 படி' இயற்றியுள்ளார் அமலனுதிபிரான் வியாக்கியானமும் செய்துள்ளார். தென்கலையார் இவர் உரையினைத் தலைமேற் கொண்டு போற்றுவர்.

### 7. வடக்குத் திருவீதிப்பிள்ளை:

நம்பிள்ளை மாணவர் திருவாய்மொழிக்கு '36000 படி; உரை எழுதியவர். இதுவே 'ஈடு' என வழங்குகிறது. காலம் 15 ஆம் நூற்றுண்டு.

### 8. அழகிய மாணவளப் பெருமாணயனுர்:

வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருமகன். திருப்பாவைக்கு '6000 படி' உரையும், அமலனுதிப்பிரான், கண்ணினுட் சிறுத்தாம்பு முதலியவற்றிற்கு வியாக்கியானமும் அருளியவர்.

www.thamizham.net - Free E book No 3371

### 9. மணவாள முனிகள் :

பெரிய ஜீயர் எனவும் படுவார். தென் கலையாருக்குத் தலைவர். பாண்டி நாட்டுச் சிக்கில் கிடாரம்-பிறந்த ஊர். துறவி. 15ஆம் நூற்றூண்டினர். இராமானுஜர் நூற்றந்தாதி உரை, ஞானசார உரை, தத்துவக்கிரய உரை, ஸ்ரீவசன பூஷண வியாக்கியானம், திருவாய்மொழி வியாக்கியானம் முமூட்சுப்படி வியாக்கியானம் ஆகியவற்றின் ஆசிரியர்.

இவ்வுரைகள் தனிப்பெரும் இலக்கியங்களாகவும், வட-தென்மொழித் தத்துவங்கள் அடங்கினமையான் சமயத் தத்துவங்களாகவும் கருதப்படுகின்றன. பிற்கால உரை' யாசிரியர்கள் பற்றி 'இருபதாம் நூற்றூண்டில் தமிழ் வளர்ச்சி எனும் பகுதியில் காண்க.

www.thamizham.net - Free E book No 3371